www.Padasalai.Net www.CBSEtips.in



பதிவெண் :

# காலாண்டுத் பொதுத் தேர்வு - 2022

**12-ம் வகுப்பு** **தமிழ்**

மதிப்பெண்கள் : 90
நேரம் : 3.00 மணி

அறிவுரைகள் (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக் கோடிடு வதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

14x1=14

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரபேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தண்டியலங் காரம் இ) தொல் காப்பியம் ஈ) நன்னூல்

2. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கி சென்றால் மட்டுமே புவி வெப்பமயமா தலைக் கட்டுப்படுத்த முடியும்- இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பனற்ற ஆற்றல் பயன்பாடு தேவையாகிறது

ஆ) பசுமை குடில்வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

3. 'உவாஉறவந்துகூடும்
உடுபதி இரவில் ஒத்தார்'- யார் யார்?

அ) சடாயு, ராமன் ஆ) ராமன், குகன் இ) ராமன் ,சுக்கிரீவன் ஈ) ராமன், சவரி

4. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி ஈ)செய்யாமல் செய்த உதவி

5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) மாச்சீர் | - | 1. கருவிளம்,கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | - | 2. நாள்,மலர் |
| இ) விளச்சீர் | - | 3. தேமாங்காய்,புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | - | 4. தேமா,புளிமா |

அ)1,2,3,4 ஆ)4,3,1,2 இ)2,3,1,4 ஈ)3,4,2,1

6. சுரதாநடத்தியகவிதைஇதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ)விண்மீன்





7. படிமம்என்பதன்பொருள்

அ) சொல் ஆ)செயல் இ) காட்சி ஈ)ஒலி

8. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம் துணிச் சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ)கூற்று தவறு, காரணம் சரி

இ)கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

9. 'விளியறிஞமிலி'- இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

10. "உயர்திணை என்பனார் மக்கட் சுட்டு
அஃறிணை என்மனார் அவரல பிறவே"- இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல்------

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கணவிளக்கம்

11. தண்டியலங் கார காலம்?

அ) கி.பி.8 ஆம் நூற்றாண்டு ஆ)கி.பி.10 ஆம் நூற்றாண்டு

இ) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி. 6ஆம் நூற்றாண்டு

12. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக.

அ) கார்பன்- டை-ஆக்சைடு ஆ) மீத்தேன் இ) நைட்ரஸ் ஆக்சைடு ஈ) ஆக்சிஜன்

13. 'ஜயாண்டெய் திமையாடி அறிந்தார்கலைகள்' என்று கூறும்நூல்?

அ) சீவக சிந்தாமணி ஆ) தமிழ்விடுதூது இ) கொன்றை வேந்தன் ஈ) தண்டியலங்காரம்

14. சென்னையின் பொற்காலம் என்று யாருடைய ஆட்சிக்காலத்தைக் கூறுவர்?

அ) எலியேல் ஆ) தாமஸ்பிட் இ) தாலமி ஈ) பிரான்சிஸ்டே

## பகுதி –II பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3X2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம் ஆகிறது விளக்கம் தருக.

17. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

18. செல்வம் இருப்பதற்கானவழியாகவள்ளுவம்உரைப்பனயாவை?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X2=4

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்று பவை எவை?

20. குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?

21. ஓலையில் எழுது வதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

### பிரிவு -3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7X2=14

22. பொருள்வேறுபாடறிந்துதொடர்அமைக்க : -

விலை, விளை

23. பேச்சுவழக்கைஎழுத்துவழக்காகமாற்றுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ஊட்டாண்ட வெளையாண்ட கொயந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

24. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.

அ) தாமரை ஆ) தலைமை

26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக் கணம் தருக.

அ) தந்தனன் ஆ) அறுத்து

28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) வெங்கதிர் ஆ) எத்திசை

29. கீழ்க்காணும் சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க.

தானே <

30. கலைச் சொல்லாக்கம் தருக. அ) Lobby ஆ) Domestic Flight

பகுதி-3 பிரிவு-1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2X4=8**

31. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைகாலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

34. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு'- இத்தொடரின் வழிபண்ட மாற்று வணிகத்தை விளக்குக.

பிரிவு-2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2X4=8**

35. "படா அம்ஈத்த கெடாஅ நல்லிசை"- இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்குக.

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்குக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

பிரிவு-3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3X4=12**

39. நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப்புணையைச் சுடும்- குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும்- உலகில்





பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டு மெனில்- நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே- உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே- அண்மித்த
தீண்டஒண்ணாதார்!
- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது)

ஊழி பெயரினும் தாம்பெயரார்

42. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக (அல்லது)

பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக

43. தமிழாக்கம்தருக

1. Learning is a treasure that will follow its owner everywhere
2. A new language is a new life
3. If you want people to understand you, speak their language
4. The limits of my language are the limits of my world

பகுதி-4

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3X6=18**

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக. அல்லது

ஆ) செய்ந்நன்றி அறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக

45. அ) பண்டையகாலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல்முறைகளைத் தொகுத்துஎழுதுக. (அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூக பற்று ஆகியவற்றை விவரிக்க. (அல்லது)

ஆ) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு- இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

பகுதி - 5

**47. அடிப் பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

அ) 'ஒருமையுடன் நினது' எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடி பிறழாமல் எழுதுக.

ஆ) 'வரும்'- என முடியும் குரலை அடிப்பிறழாமல் எழுதுக.

**************



www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593